www.padippakam.com


# ஈழ தேசம்

மலர் - 1
இதழ் - 2
ஒக்டோபர் 95


# யாழ்ப்பாணத்தின் மீது குண்டு வீச்சு!

- 23 செப்படம்பர்

கடந்த 21ம் திததி முதல் போர்ச் செய்திகளை வெளியிட இலங்கை தடைசெய்து அரசு உத்தரவிட்டது. இது வெளியான சிலமணிநேரத்திலேயே. சந்திரிகாவின் ஆணையின் பேரில் யாழ்ப்பாணத்தில் பலத்த குண்டு வீச்சு நடைபெற்றது. அப்பா பண்டாரநாயக்காவும் அம்மா சிறிமாவோவும் தமிழ்க் குழந்தைகளின் கல்வி உரிமையைப் பறிப்பதில் மும்முரமாக இருந்தனர். சந்திரிகாவோ குழந்தைகளைக் கொன்றொழிப்பது என்றே சபதம் பூண்டிருக்கிறார் என்று தோன்றுகின்றது.

நாகர்கோயிலில் உள்ள பள்ளியில் இடைவேளையின் போது, மரத்தடியில் அமர்ந்து பள்ளிக் குழந்தைகள் மதிய உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அப்போது விமானப்படையினர் குறியிட்டு அங்கு குண்டுகளை வீசினர். இதில் 42 குழந்தைகள் கொல்லப்பட்டனர். நூறு குழந்தைகள் வரை படுகாயமடைந்தனர், குண்டுவீச்சில் இறந்த குழந்தைகளின் உடல் சிதறிச்சின்னா பின்னமாகி மரக்கிளைகளிலும் அயற் புறங்களிலும் அடையாளம் காண முடியாமல் வெறும் சதைகளாயும் எலும்புகளாயும் கிடந்தது . ). பொதுமக்கள் சிலரும் இதில் கொல்லப் பட்டனர்.

வடமராட்சிப்பகுதியில் மணல்காடு கோவளம் பகுதியிலும் ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த 7 பேர் குண்டு வீச்சில் இறந்தனர், இதில் 4 பேர் குழந்தைகள் இதைவிட மேலும் 3 குழந்தைகள் உட்பட ஆறு பேர் குண்டுவீச்சால் அடையாளம் தெரியாமல் சிதறிப்போய் விட்டனர்.

### 42 பள்ளி மாணவர்கள் மரணம்! சந்திரிகாவின் கொடூரமான தாக்குதல்.



இந்தக் கொடூரமான தாக்குதலை ஈழதேசிய ஜனநாயக விடுதலை முன்னணி வன்மையாகக் கண்டித்துள்ளது.

அந்த அறிக்கை விபரம்:

"நாகர்கோயிலடி மத்திய கல்லூரி மீது இலங்கை இன வாத அரசு மேற்கொண்ட கொடூரமான விமானத்தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இத்தாக்குதலில் 42 மாணவர்களும் 35 பொதுமக்களும் கொல்லப்பட்டனர், 158 மாணவர்கள் உட்பட பொதுமக்களும் காயம் பட்டுள்ளனர். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும், பிரான்ஸ் மருத்துவக் குழுவும் இந்தத்தாக்குதலை உறுதிப்படுத்தியுள்ளது. ஹிட்லரைவிட சந்திரிகாமோசமான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளார். இப்படி வட கிழக்கு தமிழ்ப்பேசும் மக்களைத் திட்டமிட்டுக் கொலை செய்யும் சந்திரிகாவின் பேரினவாத அரசை நியாயப்படுத்தி ஆதரவளித்துவரும் கொழும்புத்தமிழ் இயக்கங்களையும் கட்சிகளையும் இனங்காண வேண்டியது அவசியமாகும்.

சந்திரிகாவின் இந்தக்குண்டு வீச்சுகள் தற்செயலானவை அல்ல. விமான ஓட்டிகள் 'லாண்ட் மார்க்' என்ற வழிகாட்டுதலின் துணையுடனேயே குண்டு வீசுகின்றனர். 'லாண்ட்மார்க்' என்ற இடக்குறிப்புப்படம், எந்த இடத்தில் எது அமைந்திருக்கிறது என்பதை தெளிவாகவே குறிப்பிடும்,

பள்ளிக்கூடம், கோயில், மருத்துவமனை, குடியிருப்புகள் போன்ற நிலத்தில் அமைந்துள்ள எல்லா இடங்களையும் இந்த 'லாண்ட் மார்க்' தெளிவாகக் காண்பிக்கிறது.

அதைத் துணையாகக் கொண்டே குண்டுகள் வீசப்படுகின்றன. இந்தப்பள்ளிக்கூடத்தின் மீது தெரிந்து கொண்டு, வேண்டுமென்று குழந்தைகளைக் கொல்லவே குண்டு வீசப்பட்டுள்ளது, இதை சந்திரிகா அரசு மறுக்கமுடியாது.

<u>கடைசிச் செய்தி</u>

## யாழ்ப்பாணத்தில் "இடிமுழக்கம்!"

ஒக்டோபர் 4

கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று "இடிமுழக்கம்" என்று பெயரிடப்பட்ட. 7500 இராணுவத்தினர் மூன்று பிரிகேடியர் தலைமையில் தாக்குதலை மேற்கொண்டனர் அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர் வழியாக இராணுவத்தினர் நடாத்திய தாக்குதலில் 200 புலிகள் உட்பட பொதுமக்களும் இறந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

150 புலிகள் இறந்ததாக புலிகளின் வானொலி அறிவித்துள்ளது.

(I.C.R.C) சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திடம் புலிகளின் சடலத்தை ஒப்படைப்பதாக இராணுவத்தினர் கூறியுள்ளனர்.

இத்தாக்குதலினால் மீண்டும் 50,000 தமிழ் மக்கள். வீடுகள், உடைமைகளை இழந்து தென்மராட்சி, யாழ்ப்பாணம் நோக்கி அகதிகளாக சென்று கொண்டிருந்கின்றனர்.

மேலும் முல்லைத் தீவில் கடற்படையிடன் நடந்த மோதலில் 20 இராணுவத்தினரும், 25 புலிகளும், 10 மக்களும் பலியாகி உள்ளனர்.

இந்தச் சம்பவத்தினால் கொழும்பில் உள்ள அரசாங்க, தனியார் உட்பட்ட அனைத்து மருத்துவமனைகளிலும் காயம்பட்ட இராணுவத்தினர் அவசர சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## கோடி கோடியாய் ஊழல் புரியும் அஷ்ரப் ?

கப்பல் போக்கு வரத்து துறைமுக அமைச்சர் எம். அஷ்ரப் பின் மோசடி ஒன்று வெளியாகியுள்ளது. காலித்துறைமுக அபிவருத்தித் திட்டம் தொடர் பாக, டெண்டர் விதிகளுக்கு முரணாக அஷ்ரப்பும், பிரதி அமைச்சர் விஜய சேகராவும் டெண்டர் சபையில் அங்கம் வகித்தனர். இந்தத்திட்டமூலம் அஷ்ரப் ஐம்பதுலட்சம் டாலர் கமிஷன் பெற்றது வெளிப்பட்டுள்ளது. 1 டாலரின் பெறுமதி இலங்கையில் 65 ரூபா. எனவே 32 கோடி ரூபா இலங்கைப்பணம்.அஷ்ரப் சந்திரிகாவின் நம்பிக்கைக்கு உரியவர் என்பது குறிப்பிடத்தக்கது இதைப் பகிரங்கமாக்கி நடவடிக்கை எடுக்கக் கோரி



ஐ.தே.க. யும் பாராளுமன்றத்தில் நம்பிக்கை இல்லாத்தீர்மானம் கொண்டு வருகிறது. இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்துக்கு ஆளும் கட்சியான பொதுசன ஐக்கிய முன்னணி உறுப்பினர்கள் சிலரும் ஆதரவளிப் பார்கள் எனத் தெரிகிறது.

**ஈழ மக்களின் இதயக் குரல்**

படிப்பகம்

www.padippakam.com



# இனி என்ன செய்வது?

இலங்கையின் சுதந்திரத்திற்கு முன் தமிழர்கள் கல்விநிலை மிகவும் மேம்பட்டிருந்தது. 1948ல் இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த காலந்தொட்டு ஈழதமிழர்களின் கல்வியை அனைத்துச் சிங்கள ஆட்சியினரும் திட்டமிட்டு அழித்து வருகின்றனர்.

பல்கலைக்கழக நுழைவிற்கு சிங்கள மாணவர்களை விட தமிழ் மாணவர்கள் அதிக புள்ளிகள் எடுக்க வேண்டும் என்ற 'தரப்படுத்தல்' என்ற முறையும், தனிச்சிங்கள சட்டமும் ஈழத்தமிழ் மாணவர்களை மிகவும் பாதித்தது. இதனால் ஈழத்தமிழ் மாணவர்கள் கல்வி உரிமைக்காக போராட வேண்டிய நிலை ஏற்பட்டது. இச்சாத்வீக போராட்டத்தை சிங்கள அரசு இராணுவ பயங்கர வாதத்தினால் அடக்க முற்பட்டது. இதனால் ஈழத் தமிழ் மாணவர்கள் ஆயுதப் போராட்டம் நடத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டனர். தமிழருக்கு ஆட்சி உரிமை இல்லாமல் தமிழர்கள் தமிழராக வாழமுடியாது என்ற முடிவுக்கு வந்து தமிழர்கள் போராட்டத்தில் ஈடுப்பட்டனர். இதனை சாக்காக வைத்து ஈழத்தமிழர்களின் கல்வி நிலையை இன்னும் மோசமான நிலைக்கு அரசு திட்டமிட்டு தள்ளியது.

ஆரம்பத்தில் கல்வி உரிமைக்காக ஈழத்தமிழ் மாணவர்கள் போராட்டத்தில் இறங்கினர். இடையில் யுத்த சூழ்நிலை காரணமாக ஈழத்தமிழ் மாணவர்கள் கல்வியை துறக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இன்றோ ஆரம்பக் கல்வி பயிலும் மாணவர்கள் கூட யுத்தத்தில் ஈடுபட நிர்ப்பந்திக்கப் படுகின்றனர். வடக்கு கிழக்கிற்கு வெளியே கல்வி பயில செல்லும் தமிழ் மாணவர்கள் சிங்கள மாணவர்களால் துன்புறுத்தப்படுகின்றனர். சிங்கள காலற்படையினரால் விசாரனை என்ற பெயரில் அடிக்கடி கைது செய்யப்படுகின்றனர். சில நேரங்களில் அழைத்துச் செல்லப்படும் தமிழ் மாணவர்கள் காணாமலும் போவதுண்டு.

வடக்கு கிழக்கில் நிலவும் பொருளாதார சீர்குலைவினால் வெளிநாட்டிற்கு போய் படிப்பதற்கும் ஈழத்தமிழ் மாணவர்களால் முடிவதில்லை. இந்நிலையில் ஈழத்தமிழர்களின் கல்விக்கு உதவக் கூடிய நாடு இந்தியா மட்டுமே. ஆனால் இந்தியா இங்கு அகதிகளாக உள்ள மாணவர்களின் கல்விக்கு விசேடமாக எந்த உதவியும் புரிய முன் வருவதில்லை.

அகதி முகாம்களில் தங்கியிருக்கும் குழந்தைகளுக்கு மாதம் ஒன்றுக்கு 60 முதல் 100 ரூபாய் வரை அரசு வழங்குகிறது. இப்பணம் உணவுக்கே பற்றாக்குறையாக இருக்கும் போது கல்விக்கு செலவு செய்ய முடியாத நிலையில் பெற்றோர்கள் உள்ளனர்.

சுயமுயற்சியில் படித்தும் உயர்க்கல்வி பெற முடியாத வகையில் தமிழக அரசு ஈழத்தமிழ் அகதி மாணவர்களுக்கு தடைவிதித்துள்ளது. உலகத்தில் எப்பாகத்திலிருந்தும் வரும் மாணவர்கள் தகுதி சான்றுடன் (Eligible Certificate) தமிழகத்தில் எந்த கல்லூரிகளுக்கும் செல்லமுடிகிறது. ஆனால் ஈழத்தமிழன் என்ற ஒரே காரணத்திற்காக அரசிடமிருந்து பெற வேண்டும் என்ற தமிழக அரசின் புதிய விதியினால் ஈழத்தமிழ் மாணவர்கள் பல சிரமங்களுக்குள்ளாகின்றனர். N.O.C. என்பது ஆட்சேபம் தெரிவிக்காத சான்றிதழ் பாலஸ்தீனிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக சலுகைகளை வழங்கி வருகிறது இந்திய அரசு. இது மிகவும் வரவேற்க கூடியது. அதே போன்று சலுகைகளை ஈழத்தமிழ் மாணவர்களுக்கும் வழங்காமல் பாரபட்சமாக நடந்து கொள்கிறது இந்திய அரசு. தமிழக அரசு விதித்துள்ள தடையை நீக்கி ஈழத்தமிழ் மாணவர்களின் கல்விக்கு உதவிட வேண்டுமென்று தமிழ் சமுதாயம் எதிர் பார்க்கிறது.

தாழ்ந்த நிலையில் உள்ள ஈழத்தமிழர்களின் கல்விநிலையை உயர்த்தும் நோக்கத்துடன் "இந்திரா காந்தி சர்வதேச கல்வி நிலையம்" (Indra Gandhi International Academy) கடந்த ஐந்து வருடமாக பெங்களூரில் இயங்கி வருகின்றது. பெற்றோர்களை இழந்த ஈழத் தமிழ் குழந்தைகளும், கல்வி கற்க ஆர்வம் இருந்தும் வசதி இல்லாத ஈழத்தமிழ் குழந்தைகளும் இங்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இங்கு தங்கியிருந்து கல்வி பயிலும் 250 மாணவர்களுக்கும் கல்வி உட்பட உணவு, தங்கும் வசதி, உடைகள், மருந்துவம் அனைத்தும் இலவசமாக இப்பாடசாலையில் வழங்கப்படுகின்றன. இந்திய அரசிடம் உதவிகள் கேட்டிருந்தும் கிடைக்காத நிலையிலும் ஈழத்தமிழ் மக்கள் அளித்து வரும் உதவிகளுடன் இப்பாடசாலை இயங்கி வருகின்றது.









" நிச்சயமா இலங்கையர்தான்! சுட்டுப்போட்டு தலையை எரிச்சுப் போட்டாங்களாம்..."

### ஈழஅகதிகளுக்கு வழங்கப்படும் ஒரு மாத கொடுப் பனவுத் தொகை

ஒரு மாதம் தனி நபருக்கு வழங்கப்படும் தொகை ரூபா150. இப்பணத்தை இரண்டு தடவையாக பதினைந்து நாட்களுக்கொருதடவை வழங்கப்படுகிறது.

குடும்பத்தில் தந்தை தாய் பிள்ளைகளென ஐந்து பேர் கொண்ட எண்ணிக்கையோ அதற்கு மேலோ.எண்ணிக்கை இருந்தால்.

| | |
|---|---|
| குடும்பத்தலைவனுக்கு மாத்திரமே | ரூபா150 |
| குடும்பத்தலைவிக்கு மாத்திரமே | ரூபா140 |
| பிள்ளைகள் 15வயதுக்கு மேல் | ரூபா 120 |
| பிள்ளைகள் 12வயது இருந்து 15 வரை | ரூபா 90 |
| பிள்ளைகள் 12வயதுக்கு கீழ் | ரூபா 70 |

இதைவிட ஒரு குடும்ப அட்டையில் இரண்டு குடும்பங்கள் பதிவாகி இரண்டு குடும்பத்தலைவர் இருப்பினும் வழங்கப்படும் தொகை 150.00 ரூபா ஒருவருக்கு மாத்திரமே கிடைக்கும். ஏனையோருக்கு 140.00 மட்டும்

மாதம் வழங்கப்படும் அரிசி 12 கிலோ இந்த அரிசி 55 காசுக்கு கொடுக்கின்றனர். குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் இதே தொகைதான். 3மாதக் குழந்தைக்கு அரிசி கொடுப்பதில்லை.

சீனி ஒருவருக்கு ஒரு கிலோ. இதை 550 காசுக்கு கொடுக்கின்றனர் குழந்தைகளுக்கு குறைவாகவே வழங்கப்படும்.

மண்ணெண்ணை ஒரு குடும்பத்திற்கு 3 லிட்டர் வழங்கப் படும் இதை 350 காசுக்கு கொடுக்கப் படுகிறது.

## அகதிகள் பக்கம்

www.padippakam.com



# 'யுத்த வெறி வேண்டாம்'

ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியின் சார்பில் அதன் லண்டன் கிளைச் செயலாளர் வி. ராமராஜ் திருமதி சந்திரிகாவுக்கு கடிதம் எழுதியள்ளார். அது பின் வருமாறு:

மாண்புமிகு ஜனாதிபதி அவர்களே இலங்கை வாழ் தமிழ் மக்கள் அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசுகளினால் நசுக்கப்பட்டே வந்திருக்கிறார்கள். தமிழ் மக்கள் உரிமை மறுக்கப்பட்டு வந்துள்ளனர் என தாங்களே பல தடவைகள் கூறியுள்ளீர்கள்.

பல சகாப்தங்களாக தமிழ் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு வந்தமையினாலேயே 1976-ம் ஆண்டு தமிழ் மக்களுக்கென தனி நாடு அமைப்பதற்காக ஆயுதப்போராட்டம் நடத்துவதென தமிழ் மக்கள் முடிவு செய்தனர்.

இந்நிலையில், தமிழ் ஈழவிடுதலைப் புலிகள் தொடர்ந்தும் ஆயுதப் போராட்டம் நடத்திவருகையில் எமது கட்சிஉட்பட பல தமிழ்க்குழுக்கள் மீண்டும் ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து கொள்வதெனத் தீர்மானித்தோம்.

இலங்கையின் கடந்த கால அரசியல் தலைவர்கள் சகலரும் தமிழ் மக்கள் மீது யுத்தத்தை கட்டவிழ்த்து விட்டு. தமிழ் மக்களின் சட்டபூர்வமான உரிமைகளை மறுத்து வந்ததுடன் தமிழ் மக்களைப் படுகொலை செய்வதற்கும் இராணுவத்தை ஏவிவிட்டனர்.

தாங்கள் மட்டுமே முதன் முதலாகத் தமிழ் மக்களின் பிரச்சனைகள் குறித்து பகிரங்கமாகக் கூறியதுடன் அவற்றுக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று சொன்னீர்கள். தங்களின் கூற்றை எமது கட்சி மட்டுமல்ல, தமிழ் மக்கள் பலராலும் வரவேற்றனர்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான ஆணையை மக்கள் உங்களுக்கு அளித்தார்கள். தமிழ் மக்களின் சட்டபூர்வமான அபிலாஷைகளைத் தீர்க்கும் வகையில் பிரச்சனைக்குத் தீர்வு காணப்படும் என உறுதி அளிக்கப்பட்டது.

எனினும் தாங்கள் உறுதி அளித்தபடி ஓராண்டுக்கு மேலாக தீர்வுத் திட்டங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. அதேவேளையில் தமிழ் மக்களின் துன்பங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

அத்துடன், அண்மையில் அரசாங்கம் முன்வைத்துள்ள தீர்வுத் திட்டம் தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் தீர்த்து வைக்கக் கூடியதாக அமையவில்லை. எனினும் அதன் மூலம் இணக்கத்துக்கான அடித்தளம் ஒன்றை அமைக்க முடியும் என நாம் கருதினோம். ஆனால் சிங்கள தீவரவாதிகளதும் பேரினவாதிகளினதும் நெருக்குதல் காரணமாக எமது எண்ணும் பொய்யாகி விட்டது. இதனால் நாம் முற்று முழுதாகவே ஏமாற்றம் அடைந்துள்ளோம்.

இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் என்ற முன்னைய உறுதி மொழியில் இருந்து அரசாங்கம் பின்வாங்கியதுடன் தமிழ் மக்கள் மீது யுத்தத்தையும் கட்ட விழ்த்து விட்டிருப்பது குறதது நாம் கவலை அடைகிறோம்.

அண்மையில் யாழ்ப்பாணத்தின் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின் போது செய்த கண்மூடித்தனமான படுகொலைகள் அரசாங்கம் நிரந்தரமாக யுத்த வெறி கொண்டுள்ளது என்பதை வெளிப்படுத்துகிறது.

நீண்ட காலமாக இராணுவ அட்டூழியங்கள் இடம்பெற்ற போதிலும் தமிழ் மக்கள் ஒரு நம்பிக்கையுடனேயே வாழ்ந்து வந்தனர். இவ்வேளையில் அரசு மேற்கொண்டு வரும் பாரிய இராணுவத் திட்டத்தினால் அவர்களின் நம்பிக்கை சிதறிடிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் சட்டபூர்வமான உரிமைகளும் அபிலாஷைகளும் சமாதான வழிகளில் தீர்க்கப்படாவிடன் ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்துள்ள தமிழ் குழுக்கள் மீண்டும் ஆபுதம் ஏந்தத்தயங்கமாட்டர்கள்.

## தமிழை ஆட்சி மொழியாக்க கோரி உண்ணாவிரதம்

தமிழகத்தில் தமிழ் மொழியை ஆட்சி மொழியாகவும் பயிற்று மொழியாகவும் ஆக்கவேண்டும் என்று கோரி தலைநகர்த் தமிழ்ச் சங்கம் சார்பில் 16 ம் தேதி சென்னையில் வள்ளுவர் கோட்டம் அருகில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்பட்டது.

இந்த உண்ணாவிரதத்துக்கு பேராசிரியர் தமிழண்ணல் தலைமை தாங்க முனைவர் சிலம்பொலி செல்லப்பன் உண்ணாவிதத்தை துவக்கிவைத்தார்.

## பட்டினிநிலை வரட்டும், பார்க்கலாம்.

யாழ்ப்பாணத்தில் இன்னமும் பட்டினி நிலைமை ஏற்படவில்லை. அப்படி நிலைமை ஏற்பட்டால் நாம் சகல நடவடிக்கைகளையும் தவறாமல் மேற்கொள்ளுவோம் என்று பி.பி.ஸி. யில் புளோட் இயக்கத்தைச் சேர்ந்த த.சித்தார்த்தன் கூறியுள்ளார்.

## இரண்டு ஆட்சியிலும் அதிகாரி

கடந்த ஆட்சிக்காலத்தில் கேப்டன் முனாஸ் அம்பாறை, மட்டக் களப்பு பகுதிகளில் வெள்ளை வேன்களில் வந்து 158 தமிழ் இளைஞர்களை கடத்தி இரவு பகலாக கொலை செய்தும், சாலை ஓரத்தில் எரித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதை ஜே.எப்.ஏ. தூசா தலைமையிலான மனித உரிமை விசாரிணைக்குழு அறிக்கை வெளிப்படையாகச் கூறியுள்ளது. இதே முனாஸ்தான் அண்மையில் நடைபெற்ற வாவிக் கொலைகளுக்கும் பொறுப்பானவர் எனத்தெரிய வந்துள்ளது, இரண்டு ஆட்சியாளருக்கும் காவல்நாயாக இருந்திருக்கிறார் முனாஸ்.

## தீர்வுத்திட்டம் எங்கே போகப் போகிறது?

கொழும்பு, செப் 7.

இலங்கையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்கச் செய்யும் சந்திரிகா அரசின் புதிய தீர்வுத் திட்டம் நாடாளுமன்ற தேர்வுக்குழுவின் முன் தாக்கல் செய்யப்படுவது நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது.

இத்தகவலை சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக மக்களிடையே எழுந்துள்ள தவறான கருத்தைப் போக்கவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதன் மூலம் இலங்கை அரசின் புதிய சமரசத் திட்டம் கிடப்பில் போடப்பட்டுவிட்டது. புதிய சமரசத்திட்டப்படி மாகாணங்களுக்கு அதிக அதிகாரம் வழங்க அதைச் சட்டமாக்க வேண்டும். இதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வேண்டும்.

அதிபர் சந்திரிகா அறிவித்துள்ள புதிய சமரசத் திட்டத்துக்கு அமைச்சரவையில் சிலர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

## இலங்கைத் தூதரகம் மீது குண்டுவீச்சுக்கு கண்டனம்

சென்னை, செப்.14.

சென்னையில் உள்ள இலங்கை துணை ஹைகமிஷனர் அலுவலகத்தின் மீது தமிழ்நாடு விடுதலைப்படை என்று சொல்லப்படுகிற அமைப்பு குண்டு வீசித்தாக்கியுள்ளதை மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலக்குழு கண்டித்துள்ளது.

இப்படிப்பட்ட செயல் இந்திய இலங்கை நல்லுறவைப்பாதிக்கும் என்பதுடன் இலங்கையில் இனப் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு காண்பதற்கான முயற்சிகளுக்கு பாதகம் ஏற்படுத்தும் என சங்கரய்யா தெரிவித்துள்ளார்.

## இலங்கைத் துணை ஹைகமிஷனர் அலுவலகத்தில் குண்டு வெடிப்பு.

சென்னையில் உள்ள இலங்கை துணை ஹைகமிஷனர் அலுவலகக் கதவின் வெளியிலும் உள்ளேயேயும் திங்கள்கிழமை அதிகாலை 4.45 மணிக்கு சக்திவாய்ந்த நாட்டு வெடிகுண்டுகள் வீசப்பட்டன. இதில் அந்த அலுவலகத்தின் பெயர்ப்பலகை தூக்கி எறியப்பட்டது. சுற்றியுள்ள ஆறு பங்களாக்களின் ஜன்னல் கண்ணாடிகள் உடைந்து சிதறின. எவரும் காயமடையவில்லை.

## சிங்கள இளைஞர்களுக்கு கட்டாய ராணுவப்பயிற்சி

"தமிழர் பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் போரைத் தொடர்ந்து நடத்த வேண்டியது தான். அதற்கு ராணுவத்தை வலுப்படுத்த வேண்டும். எனவே கட்டாய மாக எல்லா இளைஞருக்கும் ராணுவப் பயிற்சி அளிக்க வேண்டும்" இவ்வாறு 'சிலுமின' சிங்களப்பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் ஜனாதிபதி சந்திரிகா கூறியுள்ளார். அவரின் பேட்டி விபரம். கட்டாய ராணுவ சேவையின் படி 18 வயது நிரம்பிய அனைத்து இளைஞர்களும் முதலில் ராணுவத்தில் சேர்ந்து சேவை புரிந்தாக வேண்டும். இப்பணி மூன்றாண்டகளுக்கு இருக்கும்.

## கடைசிச் செய்தி

அண்மையில் காலித்துறைமுக அபிவிருத்தித்திட்டம் தொடர்பாக இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடி குறித்து அமைச்சர் அஷ்ரப் மீதுபாராளுமன்றத்தில் கொண்டு வர இருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கைவிடுவதென்று ஐதேக தீர்மானிதத்துள்ளது.

எதிர்ப்பதால் சிறுபான்மைக் கட்சிகளும் சிறுபான்மை மக்களும் அரசுடன் மிகவும் நெருங்கி விடுவார்கள் என்ற அச்சம் காரணமாகவே ஐ.தே.க. இவ்வாறு தீர்மானித்துள்ளது.

படிப்பகம்

www.padippakam.com





# உன் அடிச்சுவட்டில் நானும்

"எப்படி என்னால் உனக்குப் புரியவைக்க முடியுமோ தெரியவில்லையே? சரி. திட்டமிட்டபடியே திருமணத்தை நடத்திவிடுவோம், ஆனால் தயவு செய்து என்னை மிகவும் மோசமாகக் கணக்குப் போட்டுவிடாதே. உன்னைக் கைவிடவேண்டுமென்று என்றைக்கும் நினைத்ததில்லை. உன்னை மிக ஆழமாகக் காதலிக்கிறேன். நீயோ இப்பொழுது என்மீது கோபப்படுகிறாய், ஆனால் ஒரு நாளைக்கு என்னைப் புரிந்து கொள்வாய்".

கடைசியில் நான் அவரைப் புரிந்துகொண்டு விட்டேன். இப்பொழுது அவர் கைது செய்யப்பட்டுவிட்டார். அறையின் மூலையில் உட்கார்ந்துகொண்டு அடக்க முடியாமல் குமுறிக் குமுறி அழுதேன்.

போலீஸ்காரர்கள், வெடிகுண்டுகளைக் கண்டுபிடிக்கும் கருவிகளைக்கொண்டு வெகுநேரம் வீடு முழுவதையும், முற்றத்தையும் சோதனை செய்தார்கள். ஆனால் அவர்களால் ஒன்றைக்கூட கண்டு எடுக்க முடியவில்லை. பிறகு அவர்கள் அறைக்குள்ளே கூடினார்கள். ட்ராயைச் சுற்றி வட்டமாக நின்றுகொண்டார்கள். அவர்களுடைய கமாண்டர் என்னை நோக்கி,

"உன்னுடைய கணவன் எதேனும் வெடிகுண்டுகள் எங்காவது ஒளித்து வைத்திருக்கிறானா? உனக்குத் தெரியுமா? எப்பொழுதாவது, எதையாவது வீட்டில் ஒளித்து வைப்பதைப் பார்த்திருக்கிறாயா?" என்றான்.

நான் அழத் தொடங்கிவிட்டேன். அழுதுகொண்டே "என்னுடைய கணவர் என்ன செய்துகொண்டிருந்தார் என்பது எதுவும் எனக்குத் தெரியாது. அவர் எதையுமே ஒளித்துவைப்பதை நான் பார்த்ததே கிடையாது" என்றேன்.

"நீ உண்மையைச் சொல்லவில்லை என்றால், உன் கணவனை இதே அறையிலேயே சாகும்வரை அடித்து நொறுக்கிவிடுவேன்."

எனக்குத் தெரியாத ஒன்றை என்னால் எப்படிச் சொல்ல முடியும்?"

அவன் ட்ராயை நோக்கி, "அந்த வெடிகுண்டுகளை எங்கே மறைத்து வைத்தருக்கிறாய் என்பதை நீ சொல்லிவிட்டால், இந்த அறை உங்கள் இருவருக்கும் காதற் கூண்டாக இருக்கும். இல்லை இப்படியே உண்மை சொல்ல மறுத்து வந்தால் இந்த அறையே சித்திரவதைக் கூடமாகும், இதிலேயே நீசாக நேரிடும்."

"வெடிகுண்டுகள் எங்கே இருக்கின்றன என்பது தெரியாது."

போலீஸார், ட்ராயிடம் ஓடி மாறிமாறி அடித்தார்கள். பிறகு மின் சாரத்தினால் 'ஷாக்' அடிக்கவிட்டார்கள். அந்தத் தாக்குதல் காட்டுமிராண்டித் தனமாக இருந்தது. அவர்
ஓடிவிட்டது. அந்தப் போலீஸ் கும்பலிடையே ஓடி, அவர்களைத் தடுக்க முய
என்னை ஒரு முரடன் பிடித்துதக் கொண்டான். அவன் தனது முரட்டுத்த
கரங்களால் என் இரு தோள்களையும் பிடித்து, அழுத்தி ஒரு நாற்காலியில்
வைத்து, நெடுமரமாக நின்றுகொண்டான். நான் கூச்சல் போடத் தொடங்
அவர்களோ தங்களது துப்பாக்கிச் சனியனை எனக்கு நேராக நீட்டிக்கொண்

சிறிது நேரத்தில் சித்திரவதையை நிறுத்திவிட்டு ட்ராயை மீண்டும் கேட்ட

• "வெடிகுண்டுகள் எங்கே இருக்கின்றன?"ட்ராய் மிகுந்த வேதனையோடு,
முன்னைக் காட்டிலும் உரத்தகுரலில் சென்னார்.

"எனக்குத் தெரியாது என்று முன்பே சொல்லிவிட்டாளோ. இன்னும் அ
கேட்டால் சொல்கிறேன். எங்கெல்லாம் அமெரிக்க வெறியர்கள் இருக்கி
அங்கெல்லாம் வெடிகுண்டுகள் இருக்கின்றன, போங்கள்!"

இந்த முறை போலீஸ் கமாண்டர் தானே அடிக்கத் தொடங்கினான். போலீ
ஒரு கைத்தடியைப் பறித்து சரமாரியாக, மழைபோல் விளாசித் தள்ளினான்.

உடலில் அடி விழாத இடமே பாக்கி இல்லை. ஒவ்வொரு முறையும்
முடித்துவிட்டு அதே கேள்வியைக் கேட்டார்கள். ஒரு வார்த்தையைக்கூட ட்
ருந்து பெறாமலேயே அப்புறப்படுத்தும்படி தனது போலீசுக்கு உத்தரவிட்டான்.
முயற்சி செய்து எழுந்துநின்ற ட்ராய் பலமான குரலில் என்னை நோக்கி, "கவ
டாதே குயென் நம்முடைய ஒன்றுவிட்ட சகோதரனும் நீயும் எப்படியாவது நி
யைச் சமாளியுங்கள்" என்று கூறினார்.

அவருடைய சட்டை கந்தல் கந்தலாக கிழிந்து தொங்கியது, ஒரு பித்த
சட்டையில் இல்லை. முகம் நெஞ்சு எல்லாப் பகுதியிலும் ரத்தம் வடித்து
ருந்தது. வாயிலை நோக்கி மெல்ல அடி எடுத்தி வைத்துக் கொண்டே என்
தீர்க்கமாகப் பார்த்து முகத்தில் புன்னகை வரவழைக்க முயன்றார்.

என்னைச் சுற்றிலும் நின்றுகொண்டிருந்த போலீசாரியமிருந்து விடுபட்
கணவரின் அருகில் செல்ல போராடி பார்த்தேன். அந்த முரடர்கள் என கடு
பிடித்துக் கொண்டிருந்தபோதும், உரக்கச் சத்தம் போட்டு "ட்ராய்! உங்களை
கடந்து நேசிக்கிறேன். உங்களை என்றும் காதலிப்பேன்" என்று கூவினேன்

கமாண்டர் என்பக்கம் திரும்பி,"காதல் இரக்கம் எல்லா வற்றையும் மற
வேறொரு கணவனைத் தேடிக்கொள். இவன் செய்த குற்றத்திற்காக இவ
வேண்டியவன்தான்" என்றான்.

படிப்பகம்

www.padippakam.com



கூயென் வான் டிராய், பகலிலே மின்சாரக் கம்பெனியின் ஒரு தொழிலாளி; இரவெல்லாம், அமெரிக்க ஏகாதிபத்திய வெறியர்களை கருவறுக்கும், கொரில்லாப் படைவீரன். அவனுடைய இளம் மனைவி குயென், கூறுகின்ற விபரங்களைக் கொண்டு ட்ரான் தின் வான் என்னும் எழுத்தாளரின் படைப்பே, இந்நூல். கொரில்லா போராட்டத்திற்கு மத்தியில், குண்டுமாரி பொழிகையில், காதலுக்கு இடமுண்டு. வீரத்தையும், தியாகத்தையும், கொள்கைப் பற்றையும் கூர்மைப் படுத்துகின்றது காதல். நாட்டுப் பற்று மிக்க இளைஞர்களின் தனிப்பண்புகள் ஒவ்வொரு சொற்களிலும் ஒலிக்கின்றன. தன் இளம் மனைவியின் மீது காதலைப் பொழிகின்ற நேரத்தில் இந்த வீரன் கூறுகிறான்:

"நீ மிகச் சிறந்த பெண்ணாக மாற வேண்டுமென்றே விரும்புகிறேன். நாம் ஒருவரை ஒருவர் எவ்வளவு காதலிக்கிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு நாம் மிகச் சிறந்த மனிதர்களாக மாற ஒருவருக்கொருவர் உதவ வேண்டும்" என்று கூறி காதலுக்கு இலக்கணம் வகுத்துள்ளான.

அதே சமயத்தில் காதலியைக் காட்டி அவன் உள்ளத்தின் உறுதியைத் தகர்க்க முயன்ற போலீஸ் அதிகாரியைப் பார்த்துக் கூறுகின்றான:

" ான் கைது செய்யப்பட்டதிலிருந்து இன்று வரை நாங்கள எவ்வாறு, எப்பொழுது திருமணம் செய்து கொண்டோம் என்பதைத் தான் சங்கூதிக்கொண்டே இருக்கிறீர்களே! எங்கள் திருமணப்புகைப் படத்தை என் கண்களுக்கெதிராகத் திணித்து காதலையும், மகிழ்ச்சியையும் சுகத்தையும் பற்றி நீண்ட பிரசங்கங்கள் செய்து உங்கள் மூச்சையும் நேரத்தையும் வீணாக்காதீர்கள். என்னுடைய மனைவியின் உருவம் என்னுடைய நாட்டை மறக்கச் செய்துவிடும் என்று மனப்பால் குடிக்காதீர்கள. இந்த மண்ணில் அமெரிக்க வெறியர்கள் இருக்கும் வரை எந்த மனிதனுக்கும் சந்தோஷம் கிடையாது" என்று அமெரிக்க கைக்கூலிகளுக்குப் பதிலிறுத்து, நாட்டுப் பற்றுக்கும் கொள்கைப் பற்றுக்கும் இலக்கணமாகிவிட்டான்.

இத்தகைய இளைஞர் படைகளைக் கொண்ட நாட்டினை அடக்க, எவ்வளவு பெரிய வல்லரசாலும் முடியாதென்பதை வியத்நாம் மக்களின் வீரப்போராட்டம் உலகிற்கு அறிவிக்கின்றது; இந்த வீரத்தைப் படம் பிடித்துக்காட்டுகிறது. அதே சமயத்தில், அமெரிக்க ஏகாதிபத்திய வெறியர்களும், அவர்களுடைய கைக்கூலியான தெனவியத் நாம் ாஅரசும்ா தேச பக்தர்கள் மீது புரிகின்ற சித்திரவதை, 20 - ம் நூற்றாண்டில் நடக்கக்கூடியதல்ல. இவ்வளவு கொடுமைகளைப் புரிந்து விட்டு, ஜனநாயகத்தைப்பற்றிப் பேச அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும், அதன் அதிபர் ஜான்சனுக்கும் உரிமை இல்லை என்று இந்த வரலாறு உலகிற்கு எடுத்துக்கூறுகின்றது.

ஆண்டு ஒன்றுக்கு 2,500 கோடி டாலர் அளவிற்கு அமெரிக்கா வியத்நாம் யுத்தத்திற்காக செலவு செய்கின்றது. 17வது கப்பற்படையும் பசிபிக் மகா சமுத்திரத்தில் வைத்துள்ளது. 5 லட்சம் அமெரிக்க துருப்புகள் தென் வியத்நாமில் உள்ளன. இவ்வளவு படைகளும் ஆயுதங்களும் பயன்படுத்தி 15 ஆண்டு காலமாக, 11/2 கோடி மக்களைக் கொண்ட தென் வியத்நாமை அடக்க முடியவில்லை. அதற்கு மாறாக அமெரிக்க படைகளை வெளியேற்றியே தீருவோமென்று உறுதியுடன் மக்கள் ஒன்று திரண்டு, போராடும் வரலாற்றினை இந்த வரலாற்றின் மூலம் புரிந்து கொள்ள முடியும்.

அதே நாள் இரவு, பதினோரு மணி இருக்கலாம். போலீஸ்காரர்கள் திரும்பவும் வந்தார்கள். "உன்னை உன்கணவன் உடனே பார்க்க வேண்டும் என்று கூறுகிறான்" என்றார்கள்.

இதனைக் கேட்டவுடன், அவனைப் பார்க்கவேண்டும் என்ற ஆவல் உந்த அவர்களுடைய காருக்கு ஓடினேன், அவர்கள் ட்ராயை எங்கே வைத்திருக்கிறார்கள் என்பது தெரிந்திருந்தால், அவரைக் கவனித்துக்கொள்ளவும் அவருக்கு உணவு கொண்டு போகவும் முடிந்திருக்கும். ஆனால் எதுவுமே என்னிடம் தெரிவிக்கவில்லை. சிறிது நேரத்தில் ஒரு சிறு சந்துக்குள் காரை ஓட்டிச் சென்றார்கள். அங்கே ஒரு பள்ளிக்கூடத்தில் படிக்கும் மாணவியைக் கைதுசெய்து அழைத்துக்கொண்டார்கள். எங்கள் இருவரையும் நகரப்போலீஸ் தலைமை நிலையத்திற்குக் கொண்டு சென்றார்கள். அங்குள்ள "விசாரணை அறையில்" ட்ராயினுடைய நடவடிக்கைகளோடு அந்தப் பெண்ணும் பங்கு பெற்றிருப்பதாக சந்தேகப்பட்டு கைது செய்யப்பட்டிருப்பதை அறிந்து கொண்டேன். அதே இரவில் நானும் 'விசாரிக்கப்பட்டேன்'. போலீஸ் உயர் அதிகாரி என்னை விசாரித்தார்.

"உன் கணவனுடைய நடவடிக்கைகள் பற்றி எதேனும் உனக்குத் தெரியுமா ?"

"தெரியாது."

"திருமணம் முடிந்து எவ்வளவு நாட்களாகிறது ?"

"சரியாகப் பத்தொன்பது நாட்கள்!"

"ட்ராயையும், உன்னையும் போன்ற புதிய இளம் தம்பதிகளுக்கு வாழ்க்கையிலேயே மகிழ்ச்சிகரமான அருமையான நாட்கள் இதுவாகத்தான் இருக்கமுடியும் என்று உணருகிறாயல்லவா ?"

"ஆமாம்.. அப்படித்தான் உணர்கிறேன்!"

"நல்லது! ஒன்றைக்கூட மறைக்காமல் எல்லாவற்றையும சொல்லிவிட்டால், இந்த அருமையான, மகிழ்ச்சிகரமான நாட்கள் இத்தோடு முடிந்துவிடாது..."

அவன் இடைவெளியிட்டு, கொட்டாவி விட்டுக்கொண்டே நாற்காலியில் சாய்ந்துகொண்டான். அவன் எலிமூஞ்சி போன்ற முகத்தவன். கஞ்சா குடிக்கிறவனைப் போன்ற பாவனையில் இருந்தான்.

மேலும் தொர்டர்ந்தான்.....

"அடிக்கடி ட்ராய் யாரைப் பார்க்கச் செல்வான் ?"

"நாள் முழுக்க அவர் வேலை செய்வார். சில சமயங்களில் மாலை நேரங்களிலும் வேலை செய்வார். அவர் வெளியே செல்வதே ரொம்பவும் அரிது. எப்பொழுதாவது தெருவைச் சுற்றி வருவார். அடிக்கடி அவர் யாரைச் சந்திப்பார் என்று எனக்குத் தெரியாது."

"யாராவது அடிக்கடி அவனைச் சந்திக்க வருவார்களா ?"

"எப்பொழுதோ ஒரு முறை... அவர்கள் வாத்தியம் இசைப்பார்கள், அல்லது பாடுவார்கள், அல்லது அவர்களுக்குக் கொடுத்திருக்கும் வேலைகளைச் செய்வார்கள். அவருக்கு வாழ்க்கைப்பட்டு இரு வாரங்கள்தான் ஆகிறது. அவருடைய நண்பர்களைப்பற்றி அதிகம் தெரிந்திருக்க முடியாதல்லவா ?"

"நன்றாக யோசித்துப் பார்! உனக்கு என்னவெல்லாம் தெரியுமோ அதையெல்லாம் சொல்லிவிடு. ஒன்றை நினைவில் வைத்துக்கொள்! நீ எதையும் மறைக்காமல் சொல்லிவிட்டால், அவன் விடுதலை செய்யப்படுவான். ட்ராயை நான் சந்தித்தேன், இப்பொழுது உன்னைச் சந்திக்கிறேன். உண்மையைச் சொல்லப் போனால் நீங்கள் மிக அருமையான தம்பதிகள்! உண்மையிலேயே உங்களுக்காக வருந்துகிறேன்."

எங்கள் திருமணத்தன்று நானும் ட்ராயும் சேர்ந்து எடுத்துக்கொண்டிருந்த திருமணப் புகைப்படத்தை மேஜை மேல் தூக்கிப் போட்டான். அந்த புகைப்படத்தில் நான் நீல நிறப் பூக்கள் நிறைந்து அழகிய 'கவுன்'அணிந்து, கையில் பெரியதொரு மலர்ச்செண்டு வைத்திருந்தேன். நெருக்கமாக என் ட்ராய் நின்றுகொண்டிருந்தார். அந்தப் போலீஸ் அதிகாரி தனது குரலில் இரக்கத்தை வலிந்து சேர்த்துக் கொண்டு கூறினான்.

"உண்மையிலேயே, இத்தகைய இளம் தம்பதிகளை நிரந்தரமாகப் பிரிப்பது என்று எண்ணுகிறபோது எவருடைய இதயத்தையும் சுண்டி இழுக்கவே செய்யும். இந்த உத்யோகத்தில் வெகுகாலமாக இருந்து வந்திருக்கிறேன். பல குடும்பங்களின் மகிழ்ச்சியை நான் காப்பாற்றியிருக்கிறேன். நீ என்னை நிச்சயமாக நம்பலாம். நீ மட்டும் ட்ராயுடைய தலைவர்களையும் அவர்களது கூட்டாளிகளையும் கண்டு பிடிக்கவும், வெடிகுண்டுகள் எங்கே மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றன என்பதெல்லாம் நாங்கள் அறிந்து கொள்ளவும் உதவி செய்வாயானால், நிச்சயமாக நீயும் ட்ராயும் திரும்பவும் ஒன்று சேர்ந்து வாழலாம்" என்றான்.



"அருடைய நடவடிக்கைகளை நான் அறியேன். என்னுடைய தொழிற்சாலையிலும், வீட்டிலும் எனக்குத் தலைக்கு மேலே வேளைகள் இருக்கும். அதற்கே நேரம் போதாது; நான் பணியாற்றும் பருத்தி, கம்பளித் தொழிற்சாலைக்கு ஒருமுறை சென்று பாருங்கள்; அப்பொழுது நான் சொல்வது விளங்கும். ஞாயிற்றுக்கிழமைகளில்கூட நான் வேலை செய்தாக வேண்டும்.

என்னையும்,அந்தப் பள்ளிக்கூட மாணவியையும் ட்ராயினுடைய தொடர்புகள் பற்றி அறிய அந்தப் போலீஸ் அதிகாரி நீண்டநேரம் விசாரணை செய்தார். நடுச்சாமம் இருக்கும், எங்கள் இருவரையும் 'சித்திரவதைக் கருவிகளை' மிக அருகில் நின்று பார்க்கும்படி செய்தார்கள். அறையின் மேல்முகட்டிலிருந்து நீண்ட கயிறுகள் தொங்கிக் கொண்டிருந்தன. அவற்றில்தான் கைதிகளைப் பிணைத்துக் கட்டுவார்கள். உயிரற்ற உடலைக் கட்டி தூக்கி எறிவதற்குக் கெட்டியான கோணிச் சாக்குகள் கிடந்தன. தண்ணீரோடு கலக்கப்பட்ட சோப்பு நுரை நிறைந்து தொட்டிகள் இருந்தன. அவற்றைக் கைதிகளுக்கு வலுக்கட்டாயமாக வாய்க்குள் புகட்டுவது; நகக்கண்ணுக்குள் பாய்ச்சுவதற்காக வைக்கப்பட்டிருந்த பல்வேறு வகையான ஊசிகள்; தண்ணீருக்குள் மூச்சைப் பிடித்து அமுக்குவதற்காக தண்ணீர் தொட்டிகள், என்று இன்னும் என்னவெல்லாமோ இருந்தன.

தொடரும்...


படிப்பகம்

www.padippakam.com



# அறிவுக் களஞ்சியம்

தொகுப்பு: கே. பேரின்பநாயகம்



## சூரியனும் கிரகங்களும்.

சென்ற இதழில் பூமிபற்றிய பல அரிய விபரங்களை அறிந்தீர்கள். இம்முறை நமது சூரிய குடும்பத்தைப் பற்றிப் பார்க்கலாமா?

மேகமூட்டமற்ற நிர்மலமான் இரவில் சில மணி நேரம் விண்ணை அவதானியுங்கள். நட்சத்திரங்கள் அனைத்தும் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி நகர்வது போல் தோன்றுகிறதல்லவா? உண்மையில் நட்சத்திரங்கள் நகர்வதில்லை. பூமி தன்னைத்தானே தனது அச்சில் சுழல்வதால் விண்ணிலுள்ள பொருட்களனைத்தும் மேற்கு நோக்கி நகர்வது போல் தோன்றுகிறது. சிலவாரங்களுக்கு தொடர்ந்து விண்வெளியை அவதானித்து வந்தீர்களானால் சில நட்சத்திரங்கள் தமக்குரிய இடத்திலிருந்து நகர்வது போல் தோன்றும். இவ்வாறு நகர்பவை கிரகங்களே. நட்சத்திரங்களும் நகர்கின்றன, ஆனால் அவை நகர்வது வெறும் கண்களுக்குப் புலப்படாது. சக்திவாய்ந்த தொலைநோக்கிகள் மூலமே நட்சத்திரங்கள் நகர்வதை அவதானிக்க முடியும்.

புதன், வெள்ளி, செவ்வாய், வியாழன், சனி ஆகிய ஐந்து கிரகங்கள் இடம்பெயர்வதை சாதாரணமாக அவதானிக்க முடியும். இவற்றுள் வெள்ளி மிகப்பிரகாசமானதென்பதால் மிக இலகுவாக அவதானிககலாம். இதற்கடுத்த நிலையில் வியாழன் பிரகாசமுடையது. அடுத்து செவ்வாய், சனி, புதன் என்பவை பிரகாசம் குறைந்து வரும் வரிசையில் உள்ளன. யுரேனஸ், புளுட்டோ, நெப்டியூன் என்பனவற்றை வெறும் கண்களால் அவதானிக்க முடியாது.

சூரியனிலிருந்து அபமியிதமான சக்தி உற்பத்தியாகி வெளியாகிறுது. ஒளி, வெப்பம், கதிர்வீசல் ஈர்ப்பு போன்ற சூரிய சக்தியால் புமியும் ஏனைய கிரகங்கள் உரிய ஒழுங்கில இயங்குகின்றன. பூமியும், பூமியிலுள்ள சகல உயிரினங்களும் சூரிய சக்தியினால் தான் நடைபெறுகிறது.

சூரியன் சுமார் 500 கோடி ஆண்டுகளின் முன் தோன்றியது. இன்னும் சமார் 500 கோடி ஆண்டுகளுக்குச் செயற்படும். சூரியனின் ஆரை சுமார் 1,392,000 கிலோமீட்டர். பூமியை விட சுமார் 330,000 மடங்கு அதிக எடையும், 109 மடங்கு அதிக ஆரையும் கொண்ட சூரியனுள் பூமியைப் போலவே தன்னைத்தானே தனது அச்சில் சுற்றியபடி பால்வழி [MilkyWay]யின் மையத்தைச் சுற்றிவருகிறது. சூரியன் தன்னைத் தானே ஒரு மாதத்தில் சுற்றிக் கொள்கிறது. ஒரு தடவை பால்வெளியைச் சுற்றிவர 22.5 கோடி வருடம் தேவைப்படுகிறது.

சூரியனின் விட்டம் சந்திரனுடையதைவிட 400 மடங்கு அதிகமானது. பூமிக்கும் சந்திரனுக்குமிடையிலுள்ள தூரத்தை விட 400 மடங்கு அதிக தூரத்திலுள்ளது. உண்மையிலேயே பூமிக்கு மிக அண்மையிலுள்ள ஒரு நட்சத்திரமே சூரியன். சூரிய ஒளி பூமியை அடைய சுமார் 8 நிமிடம் 20 விநாடி நேரம் செல்கிறது. சூரியனின் அதிக எடை காரணமாக அதன் ஈர்ப்புச் சக்தி மிக அதிகம். பூமியில் 45 கிலோகிராம் எடையுள்ள ஒருவர் சூரியனில் 1,270 கிலோகிராமாக இருப்பார்.

சூரியனின் உட்பகுதி நான்கு பகுதிகளைக் கொண்டது. சூரியனின் மேற்பகுதி போட்டோஸ்பியர் எனப்படும் [Photosphere]. இது சுமார் 540 கிலோமீட்டர் தடிப்பானது. இதன் வெப்பநிலை சுமார் 5500 பாகை செல்சியஸ். நமது கண்களுக்குப் புலப்படுவது சூரியனின் போட்டோஸ்பியர்தான். இது சிறுதுணிக்கைகளைக் கொண்டது. ஒவ்வொரு துணிக்கையும் சுமார் 1000 கிலோமீட்டர் குறுக்களவைக் கொண்டது. அதிவெப்பமடையும் போது சூரிய மேற்பரப்பைவிட்டு வெளியேறி, கதிர்வீசல் முறைமூலம் தமது சக்தியை வெளியேற்றியபின் குளிர்மடைந்து மீண்டும் சூரியப் பரப்பை அடைகின்றன. இதனால் சோலார் பிளயாஸ் [Sola: Flares], சோலார் புரமினன்ஸ் [Solar Promin‹nces] என்பன ஏற்படுகின்றன.

போட்டோஸ்பியரின் கீழ் மேற்காவுகைப் படலம் உள்ளது. [Convection Zone] இதன் வெப்பநிலை சுமார் 11 லட்சம் பாகை செல்சியஸ். இதன்கீழ் கதிர்வீச்சுப்படலம் [Radiative Zone] உள்ளது. இதன் வெப்பநிலை சுமார் 25 லட்சம் பாகை செல்சியஸ். இதனையடுத்துள்ள சூரியனின் மையப்பகுதி மையம் [Core] எனப்படும். இங்குள்ள வெப்பநிலை சுமார் ஒன்றரைக் கோடி பாகை செல்சியஸ். 'அணுமையச் சேர்க்கை மூலம் ஹைட்ரஜன் அனுக்கள் இணைந்து ஹீலியம் அணுவாகமாறி அதிஉயர் சக்தியை வெளியேற்றப் படுவது இப்பகுதியில்தான்.

$4\,{}_{1}H^{1}$ --- ${}_{2}He^{4} + 2\,{}_{+1}e^{0} +$ அதிஉயர் சக்தி [26.7 MeV]

இவ்வாறு வெளியேற்றப்படும் அதியுயர் சக்தியின் காரணமாகத்தான் சூரியனுக்குச் சக்தி கிடைக்கிறது. இச்சக்தி வெளியேற்றத் தாக்கத்துக்கு சூரியனில் நடைபெறும் சிக்கல் வாய்ந்த கார்பன் சக்கரம் [Carbon Cycle] எனப்படும் செயற்பாடு ஊக்கியாகச் செயல்பட்டு உதவுகிறது. சூரியனிலிருந்து ஒரு செக்கனில் 4ஹ1026 ஜூல்கள் சக்தி வெளிப்படுகிறது.

ஒரு சென்டிமீட்டர் புவிப் பரப்பு ஒவ்வொரு நிமிடமும் 8.4ஜூல் சக்தியைப் போட்டோஸ்பியரின் மேல்பகுதி குரோமோஸ்பியர் [Chromosphere] எனப்படும். இது சூரியனின் வளிமண்டலம் போன்றது. இங்குள்ள வெப்பநிலை சுமார் 27,800 பாகை செல்சியஸ். இது போட்டோஸ்பியரின் மேல் சுமார் 10,000 கிலோமீட்டர் உயரம் வரை உள்ளது. இதன்மேல் கொரொனா [Corona] உள்ளது. இங்குள்ள வெப்பநிலை சுமார் 22 லட்சம் பாகை செல்சியஸ். பூரண சூரியகிரகணததின் போது சூரியனின் மேற்புறத்தைச் சுற்றி ஒரு ஒளிவட்டம் தெரிவதை அவதானித்திருப்பீர்கள். இதுவே கொரோனா. இவற்றை விட சூரியனின் மேற்பரப்பில் சூரியப்புள்ளிகள் காணப்படும். சூரியப்புள்ளிகள், சோலார் புரமினன்ஸ், சோலார் பிளயாஸ், மற்றும் சோலார் வின்ட் [Solar Wind] என்பனபற்றிய விபரங்களுக்கு அடுத்த இதழ்வரை காத்திருக்கிறீர்களா?

இதுவரை இவ்விஞ்ஞானப் பகுதியில் நீங்கள் அறிந்தவை சம்பந்தமாக மேலும்.விளக்கம் தேவைப்பட்டால் இச்சஞ்சிகை விலாசத்துக்கு எழுதுங்கள். உங்கள் சந்தேகங்களுக்கு விடையளிக்க காத்திருக்கிறோம்.

## மாண்ட உயிரினம் மீண்டும் எழமுடியும்.


சுமார் மூன்று கோடி ஆண்டுகளின் முன் உயிரிழந்ததாகக் கருதப்படும் பக்டிரியாவுக்கு மீண்டும் உயிர்வழங்கப்பட்டுள்ளது. மூலக்கூற்று உயிரியலாளரான [Molecular Biologist] கலிபோர்னியச் சர்வகலாசாலைப் பேராசிரியரான கலாநிதி ரவுல் ஜே கேம்ப் [Dr,Raul J Camp] தனது ஆய்வுகூடத்தில் தான் நடத்திய பரிசோதனைகளின் போது நூற்றுக்கணக்கான உயிரிழந்த பக்டீரியாக்களுக்கு உயிரளித்ததாகக் கூறியுள்ளார். பசிலஸ் ஸ்பீரிக்கஸ் [Baciilus Sphaericus] வகையைச் சேர்ந்த இப்பட்டீரியாக்களுக்கு மீள உயிரளித்தமை விஞ்ஞான யுகத்தின் மாபெரும் வெற்றியெனக் கருதப்படுகிறது.

www.padippakam.com



## நீரிழிவு நோயும் அதன் விளைவுகளும்.

நீரிழிவு நோய் என தமிழில் வழங்கப்படும் டய பிட்டிஸ் மெலைட்டிஸ் [Diabetes mellitus] மக்களி டையே உள்ள ஒரு சாதாரண நோயெனக் கருதப்ப டும் போதிலும், இதனைக் கட்டுப்பாட்டில் வைத்தி ருக்காவிட்டால் பயங்கர விளைவுகள் ஏற்படும். சுமார் 2000 ஆண்டுகளின் முன்னமே இந்நோய் மனிதரிடையே காணப்பட்டது. தமிழ்வைத்தியர்கள் இதனை மது மேகம் என்பர். கிரேக்க மொழியிலி ருந்து டயபிட்டிஸ் என்றும் பெயர் உருவானது. "சர்க்கரையால் தித்திப் படைந்த சிறுநீர்" என்பதே இதன் அர்த்தம். "ஒருவரின் நாளத்திலிருந்து காலை உணவின் முன் எடுக்கப்பட்ட 100 மில்லி லிட்டர் இரத்தத்தில் 20 மில்லி கிராம் சர்க்கரை காணப் பட்டால் அந்நபருக்கு நீரிழிவு நோய் உள்ளது" என்பதே உலகசுகாதார நிறுவனத்தின் மருத்துவரீதியான நீரிழிவு நோயின் வரைவிக்கணம்.



உலகில் சுமார் 10 கோடி மக்கள் இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இலங்கைச் சனத்தொகை யில் சுமார் 5% மக்களுக்கு இந்நோய் உள்ளது. சுமார் 40 முதல் 60 வயதுக்கிடையிலான மக்கள் இந்நோயால் பாதிக்கப்படுகின்றனர். இந்நோயால் பீடிக்கப்பட்ட ஒருவரில் நோயாளி என்று கூறக் கூடிய அறிகுறிகள் தென்படுவதில்லை.

சர்க்கரையின் அளவு கட்டுக்கடங்காமல் போகும் போழுது சிக்கல் ஏற்படுகிறது. சர்க்கரையின் அள வுக்கு மீறுயதன் பின் ஏற்படும் விளைவுகளை மாற்றவே முடியாது. இந்நோயைப் பூரணமாகக் குணப்படுத்தமுடியாது. இந்நோய் கட்டுப்பாட்டிலி ருக்கும் வரை பயப்படத் தேவையில்லை. கட்டுப் பாட்டை மீறும்போது சிறுநீரகம் செயலிழத்தல், இதய நோய்கள், பாரிசவாதம், பார்வையிழப்பு, பார்வைக்குறைபாடு, அங்கங் கள் அகற்றப்பட வேண்டிய நிலை போன்ற பாதிப் புகள் ஏற்படும். வாழ்க்கை முறையை உகந்தவாறு மாற்றியமைத்து உணவுக்கட்டுப்பாட்டைக் கடைப்பிடிப்பதன் மூலம் நீரிழிவு நோயிலிருந்து ஏற்படும் ஆபத்துக்களிலி ருந்து தப்பலாம்.

## அராமெய்க் மொழி-

சிரியா நாட்டிலுள்ள மாலெளசா [Maaloula] எனும் கிராம மக்கள் யேசு கிறிஸ்து நாதர் பேசிய அராமெய்க் [Aramaic] மொழியை இன்றும் பயன்ப டுத்தி வருகிறார்கள். இம்மொழி பேசப்படும் மிகச் சில கிராமங்களுள் மாலெளலாவும் ஒன்று. யேசு பிரான் வாழ்ந்த காலத்தில் பாலஸ்தீனியர் பேசிய முக்கிய மொழி இதுவாகும். இக்கிராம மக்கள் பேசுவது மேற்கத்திய அராமெய்க் எனவும், ஆரம் பத்தில் டேனியல் நூலும் [Book Of Daniel], புனித மத்தேயுவின் [Gospel] அருள்வாக்கும் எழுதப் பட்டது இம்மொழியிலேயே எனவும் மொழியியலா ளர்கள் கருதுகின்றனர். அக்காலத்து எழுத்து வடி வம் தற்போது பாவனையில் இல்லை. பேச்சு வழக்கில் மாத்திரம் உள்ளது. அரபிக் எழுத்துக்க ளைக் கொண்ட இம்மொழி எழுதும் முறையை மிகச்சிலரே அறிந்துள்ளனர்.

## சிந்துவெளி நாகரிகம்



"ஆரியரைப்பற்றி கூறப்படுகின்ற கொள்கையில் இருக்கிற குற்றங் குறைக ளையும், அக்கொள்கையால் விளைந்த தீமைகளையும் அமைதியோடு அறவே நீக்கவேண்டுவது தென்னிந்தியாவின் நலத்திற்கு மிகவும் அவசியமா கிறது. அதை நீக்கி ஆரிய இனமும் தோன்றுவதற்குக் காரணமான மிகச்சி றந்த, தாய் இனங்களாய் விளங்கியவற்றிலே ஒன்றான புகழ்படைத்த தமிழர்களது பழம் பெருமையை அறிவதால் விளையும் நியாயமான சுயமரியாதையை ஏற்படுத்த வேண்டுவது பார்ப்பனர் அல்லாதாருக்கு மிகவும் அவசியமானது.

*4. "தெரிந்த நாகரிகங்களிலே மிகப் பழமையான நாகரித்தினரான தமிழ் பேசி வந்த முன்னோர்களைப் பற்றி பெருமிதம் கொள்ளுகிறோம்"*

விவேகானந்தரின் அறிவாற்றலாலும், வாதத் திறமையாலும் தான் "இந்து மதம்" சிறப்புப் பெற்றது. விவேகானந்தரின் மதக் கோட்பாடு, பார்ப்பன ருக்கு தேனாக, அமுதமாக இனிக்கின்றது.ஆனால் அவரின் வரலாற்று உண்மை ஆரிய புத்திரர்களுக்கு எட்டிக்காய்க, வேப்பங்காயாகக் கசக்கி ன்றதே! ஏன்?

1920-ஆம் ஆண்டில் பஞ்சாப் மாநிலத்தில், மான் கோமர் வட்டத்தில், ராவி -சட்லெஜ் ஆறுகளிற்கு இடையில் லாகூர்-மூல்ட்டான் புகை வண்டிப் பாதையில் அரப்பா அகழ்வு ஆய்வாளர்களின் கண்ணில் அகப்பட்டது.

1922-இல் சிந்து மாநிலத்தில் உள்ள லர்க்கானா வட்டத்தில் 70-அடி உயரம் உடைய மண்மேட்டில் ஒரு பானை ஒடு கண்டறியப் பட்டது. அதனுள் புதைந்து கிடந்த நகரமே மொகஞ்சோ- தரோ.

அரப்பாவுக்கும் மொகஞ்சோ தரோவுக்கும் இடையில் உள்ள தூரம் 400 மைல்கள் ஆகும்.

இரண்டு இடங்களையும் சிறிதளவு தோண்டிப் பார்த்தனர். இரண்டு இடங்களிலும் கிடைத்த மண்பாண்டங்களை, பலுசிஸ்த்தானத்தில் கிடைத்த மண்பாண்டங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்த ஆய்வுக்குழுவின் தலைவர் சர் ஜான் மார்சல் பெருவியப்புக் கொண்டார், தாம் அறிந்த செய்திகளைப் பத்திரிகைகளில் வெளியிட்டார்.

5. அரப்பா நாகரிகத்தைப் பெரும்பான்மையான ஆய்வு அறிஞர்கள் ஏற்றுக் கொண்டும் விட்டனர். ஒத்துக் கொண்டும் விட்டனர். ஆனாலும் ஆரியரின் வாரிசுகள் தங்களுக்கு உரியது என்று உரிமை கொண்டாட மீண்டும் மீண்டும் முயற்சி செய்து கொண்டிருக்கின்றனர்.

அரப்பா மக்கள் பேசியது தமிழ்தான் என்பதை அண்மையில் தமிழறிஞர் பேராசிரியர் முனைவர் இரா. மதிவாணன் அவர்கள் நிலைநாட்டி விட்டார்.

அரப்பாவில் புதைந்து கிடக்கின்ற கோட்டைக்கு உரியவன் தமிழன்.

அக்கோட்டையைக் கட்டியவன் தமிழன்.

அரப்பா நாகரிகத்தை வளர்த்தவன் தமிழன்.

அரப்பா கோட்டையில் இருந்து ஆட்சி புரிந்தவன் தமிழன்.

சிந்து வெளி மக்கள் தமிழர்கள் என்பதற்கு இலக்கியச் சான்று கிடைத்து விட்டது. அஃதும் ஆரியர்களுடைய 'ரிக்'வேதத்திலேயே கிடைத்து விட்டது.

### குறைந்த ஜனத்தொகை நகரத்திலும் சீனாவே முதலிடம்

சீனா உலகின் அதிக மக்கள் தொகை நிறைந்த நாடு மட்டுமல்ல. உலகின் மக்கள் தொகை குறைந்த நகரமும் அங்குதான் உள்ளது.

திபெத் பகுதியில் இமயமலைச் சாரலில் அமைந்துள்ள யூமென் என்ற நகரில் 12 குடும்பங்கள் வசித்தன ராம். கடந்த ஆறு ஆண்டுகளாக சாங்குவின் குடும்பம் மட்டுமே அங்கு உள்ளது.

குடும்பத்தின் ஆண்டு வருவாய் சுமார் ரூ.50,000. மாதந்தோறும் ரூ.900 ஓய்வூதியம் கிடைக்கிறது. எல்லாம் சரிதான். ஆனால் ஒரே ஒரு குறை. அங்குள்ள பெண்களின் திருமணத்துக்கு மாப்பிள்ளை கிடைப்பதில்லை.

அந்நகரில் மொத்தமே மூன்று குடும் பங்கள்தான் இருக்கின்றன என்பது வியப்புக் கலந்த உண்மை. அவர்க ளும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த வர்கள். அங்கு வயது முதிர்ந்த தந்தை யும் அவரது இரு புதல்வியரும் வசிக் கின்றனர்.

அங்கு நகரிய ஆட்சி முறை நடை பெறுகிறது. அதற்கு நிர்வாகி ஒருவர் தலைவர். அவருக்கு ஒரு அலுவல கம், அரசு சின்னம் எல்லாம் உண்டு. இதர நகரங்களுடன் உரிய தொடர்பு இல்லாமையால் சின்னம் எப்போதோ ஒருமுறைதான் பயன்படுத்தப்படுகி றது.

சாங்கு என்ற அந்த முதியவரின் வயது 72. அவர் ஓய்வு பெற்ற நகரி யத் தலைவர். அவருக்குப் பிறகு அவரது மகள் ஷுவோகா தலைவ ராக உள்ளார். ஒரு காலத்தில் இந்



ஆசிரியரும் வெளியிடுபவரும் சி.தயாபரன்.
முகவரி: 6/7 பூர்ணிமா குடியிருப்பு
இரண்டாவது பிரதான சாலை,
யுனைட்டெட் இந்தியா காலனி,
கோடம்பாக்கம்
சென்னை 600 024.

படிப்பகம்

www.padippakam.com



# எமதுகுரல்

வெள்ளைக்காரர் இலங்கைக்கு சுதந்திரம் அளித்த காலத்திலிருந்து தமிழர் பிரச்சினைக்கு தீர்வுத்திட்டங்கள் வெளியிடும் முயற்சிகளை சிங்களக்கட்சிகள் ஆரம்பித்தன. தமிழரின் பாரம்பரியப் பிரதேசங்களில் சிங்களவர்களைக்குடியேற்றுதல், தேசியக்கொடியில் தமிழரை அவமதித்தமை, மலையக மக்களின் வாக்குரிமையைப் பறித்தமை என்று முதல் பிரதமரான டி.எஸ். சேனநாயக்கா தமிழ் மக்களின் மேல் அரசியல் மற்றும் புவியியல் ரீதியான நெருக்கடிகளை ஏற்படுத்தினர். அப்போது அவரின் மந்திரிசபையில் தமிழ்த்தலைவர்கள் மந்திரிகளாக இருந்தனர். பின்னர் வந்த பிரதம மந்திரிகளும் சிங்களக்கட்சிகளும் தமிழர் உரிமைகளை மறுத்து வந்தனர்.

இவற்றிடையே தமிழ்மக்களின் எதிர்ப்புக்குரல் பலமடைந்த போது, சிங்களக் கட்சிகள் தமிழ்த்தலைவர்களை அழைத்துப் பேசின, விருந்துகளின் பின்னே ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. டட்லி செல்வநாயகம் ஒப்பந்தம், பண்டார நாயக்கா செல்வநாயகம் ஒப்பந்தம் என்றெல்லாம் கையெழுத்தாயின. ஆனால் அரசியல் கட்சிகளும், பௌத்த சங்கங்களும் எதிர்த்த போது அதற்குப் பணிந்து இந்த ஒப்பந்தங்கள் யாவும் கிழித்து வீசப்பட்டன. அதுமட்டுமல்ல தமிழர்களுக்கு எதிராக மோசமான இனக்கலவரங்கள் தூண்டிவிடப்பட்டன. இதே விதமாக இந்திய அரசுடன் ஜெயவர்தனா செய்த ஒப்பந்தமும் காற்றில் பறக்கவிடப்பட்டது.

பிரேமதாசா இவற்றுக்கெல்லாம் ஒரு படிமேலே போனார். தமிழ் அரசியல் கட்சிகளுக்கும், பல இயக்கங்களுக்கும் போக்குவரத்து வசதி, ஆடம்பரமான தங்கிட வசதி, ஏனைய வசதிகளைக் கொடுத்து வருஷக் கணக்கில் பேசினார். தமிழ் சிங்களக் கட்சிகளை கூட்டி வைத்து தமிழர் பிரச்சனையை எப்படித் தீர்ப்பது என்று பேசினார். மறுபுறத்தில் தன் இஷ்டத்துக்கு தமிழர் உரிமைகளைக் கொடூரமாகப் பிடுங்கி எடுத்தார்.

தமிழர்களின் பிரச்சினைகளை உணர்ந்தவராகத் தன்னை அறிவித்துக் கொண்டு அரசியலுக்கு சந்திரிகா வந்தார். தன் பெயரோடு கணவன் குமாரதுங்கா பெயரையும் தகப்பன் பண்டாரநாயக்கா பெயரையும் சேர்த்துக்கொண்டு தீராத இலங்கைத் தமிழர் பிரச்சனையைத் தீர்ப்பதே தனது முதற்பணி என்று அறிவித்தார். அதற்காக எந்த எதிர்ப்பையும் முகம் கொடுத்து முறியடிக்க முடியும் என்றார் ஆணித்தரமாக சந்திரிகா. தேர்தலில் சந்திரிகா, இதுவரை தலைமைப்பதவியேற்ற எவரையும் விட அதிக வாக்குகள் பெற்றார். பி.பி.ஸி முதலிய சர்வதேச தொடர்பு சாதனங்களில் தமிழர்பிரச்சினையைத் தீர்க்க சிறந்த தீர்வுத்திட்டத்தை வெளியிட்டு, அதை உறுதியோடு நிறைவேற்றுவேன் எத்தனை குண்டு வெடித்தாலும் இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் அமுலுக்கு வந்தே தீரும் என்றார்.

இப்படிச்சொல்லி பலமாதங்கள் கழிந்தன. தீர்வுத்திட்டம் வெளியாகவில்லை. இரண்டு வாரங்களில் வெளிவரும் என்று சொல்லப்பட்ட தீர்வுத் திட்டங்கள் பல மாதங்களின் பின்னே அறிவிக்கப்பட்டது.

தீர்வுத்திட்டத்தின் அம்சங்கள் இதுவரை வெளியானவற்றை விட பல உரிமைகளை உள்ளடக்கி இருந்தன. மாநில சுயாட்சிக்கு அத்திவாரமிட்டன.

இந்தத்தீர்வுத்திட்டம் வெளியானதும் கொழும்பில் அரசாங்க அனுசரணையோடு சம்பளமும் வாங்கி வாழும் அரசியல் கட்சிகளும், இயக்கங்களும் சந்தோஷத்தோடு வரவேற்றன. இதை நன்றிக் கடனாக்கூட எடுத்துக் கொள்ளலாம்.

இதைவிட தமிழ் நாட்டில் மார்க்கிய கம்யூனிஸ்ட் கட்சி, ஏனைய கம்யூனிஸ்டுகள், எக்ஸ்பிரஸ் நிறுவனப்பத்திரிகைகள் உட்பட எல்லாப் பத்திரிக்கைகளும் ஒரே குரலில் பாராட்டிப் புகழ்மாலை சூட்டி

இவர்களின் பாராட்டுகள் வெளிவந்துகொண்டிருந்த போதே இலங்கையிலிருந்தும் பல செய்திகள் வெளியாகின. பலம் வாய்ந்த புத்த சங்கப் பிக்குகள் சந்திரிகாவின் தீர்வை ஒத்துக் கொள்வில்லை. சந்திரிகாவின் அமைச்சர்கள் இதை எதிர்க்கிறார்கள் தீர்வுத்திட்டத்தின் பல அம்சங்களை திருத்தி எழுத சந்திரிகாவே நினைக்கிறார் என்பன இந்த ஆதாரபூர்வமான செய்திகள் ஆகும்.

கடந்த ஐம்பது ஆண்டுகளாக தீர்வுத்திட்டம் என்ற பேரில் தமிழர்கள் ஏமாற்றப்பட்டு தங்கள் உரிமைகளைப் படிப்படியாக இழந்து போனார்கள், இதன் விளைவாகவே அவர்கள் ஏந்தினார்கள் ஆயுதம். தமிழ் ஈழமே தமது சரியான தீர்வு என்ற முடிவுக்கு வந்தார்கள். இதிலிருந்து அவர்கள் இனிபின் வாங்க மாட்டார்கள்.

சந்தர்ப்பவாதத்தால் பாராளுமன்றக்கதிரைகளுக்கு ஆசைப்பட்டு சந்திரிகாவை ஆதரிக்கிறவர்களை நம்மால் உணர முடிகிறது, ஆனால், அரசியல் நிலைமைகளை, வரலாற்றை அலசி ஆராய்ந்து செய்திகளையும் கருத்துக்களையும் வெளியிட வேண்டிய நிலையுள்ள இந்த வெகுஜன தொடர்புசாதனங்களான தமிழ்நாட்டுப் பத்திரிகைகளுக்கு ஏன் இந்த தவறான போக்குகள் ஏற்பட்டுள்ளது? எமது வேண்டுகோள் இதுதான்.

ஈழத்தமிழர் வீடுதலை பெற போராட்டந்தான் ஒரே மார்க்கம். எனவே காலங்காலமாக அவர்களை ஏமாற்றுவதற்காக வெளியிடப்படும் இந்தத் தீர்வுத் திட்டங்கள் பற்றி அறியாமை நிறைந்த கருத்துக்களை வெளியிடாதீர்கள். இது தமிழரின் போராட்ட உணர்வை சோர்வடையவும் செய்யும். தப்பபிப்பிராயங்களைப் பரப்பி மேலாதிக்கஉணர்வுள்ள சிங்கள இனவாதிகளுக்கு ஆதரவு தருவதாகவும் அமைந்துவிடும். இந்த நேரத்தில் இது ஈழத்தமிழருக்கு எதிரான பெரும் துரோகமும் ஆகிவிடும்.

## யார் கொலையாளி?

இலங்கை விஷேச அதிரடிப்படையின் தலைமை அதிகாரி லயனல் கருணசேகரா உட்பட, முக்கிய அதிகாரிகள் கொழும்பு வாவியில் மிதந்த தமிழ் இளைஞர்கள் கொலை சம்பந்தமாக சி.ஐ.டி பிரிவினரால் விசாரிக்கப்பட்டு வருகிறார்கள் சந்திரிகாவின் பாதுகாப்பு அமைச்சின் கீழேயே விஷேச அதிரடிப்படை இயங்கி வருகிறது. லயனல் கருணசேகராவே சந்திரிகாவின் பாதுகாப்பாளராக இருக்கிறா



## இலங்கைப்போர் விமானம் கடலில் மூழ்கியது! 80 பேர் பலி!

கொழும்பு, செப். 13.

இலங்கை போர் விமானம் கடலில் வெடித்து விழுந்தது. அதில் இருந்த 80 பேர் உயிரிழந்தனர். அந்த விமானத்தை விடுதலைப் புலிகள் சுட்டு வீழ்த்தியதாகத் தெரியவில்லை என்றும் மோசமான வானிலை காரணமாக விழுந்து நொறுங்கியிருக்கக் கூடும் என்றும் அரசு தரப்பில் கூறப்பட்டது. சம்பவம் புதன்கிழமை அதிகாலையில் நடந்தது.

சரக்குகளை ஏற்றிச் சென்ற அந்த விமானத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டிருக்கலாம் என முதலில் வந்த தகவல்கள் கூறின. ஆனால் அதற்கான தடயம் ஏதுமில்லை.

"விமானம் ஏவுகணைத் தாக்குதலுக்கு ஆளாகவில்லை என்பது உறுதி. இது குறித்து புலன்விசாரணை நடத்தப்பட்டு வருகிறது" விமானப் படை அதிகாரி ஏர் கமோடார் ஜெயலத் வீரக்கொடி தெரிவித்தார்.

"விமானத்தை ஓட்டிச் சென்ற விமானி ராடார் தகவல் கட்டுப்பாட்டுடன் தொடர்புகொண்டு மோசமான பருவ நிலை இருப்பதாகவும் எனவே மீண்டும் தரையிறங்க வருவதாகவும் கூறியுள்ளார். ஆனால், அதற்குள் விமானம் நொறுங்கியுள்ளது. வானில் அது வெடித்துச் சிதறியிருக்கலாம் என்பதும் ஓரளவு உண்மையாக இருக்கக் கூடும்" என்றார் அவர்.

ரஷியாவில் தயாரிக்கப்பட்ட ஆண்டனோவ் ஏ.என். 32' என்ற அந்த விமானம் ரத்மலானை என்ற இடத்திலிருந்து பலாலி படைத் தளம் நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. கொழும்புக்கு வடக்கே 30 கி.மீ. தொலைவில் மேற்குக் கடல் பகுதியில் பறந்து கொண்டிருந்தபோது அந்த விமானம் விழுந்தது. அதில் விமானப் படை பணியாளர்களும், ராணுவத்தினரும் இருந்தனர்.

அந்த விமானம் புறப்படும் முன் சிகரெட் பெட்டிகள் அடங்கியதாகக் கூறப்படும் இரு சரக்குப் பெட்டிகள் ஏற்றப்பட்டன. விமானத்தில் ஒன்று சோதனைக்கு உள்ளானது. மற்றொன்றை அதிகாரிகள் சோதனையிடாமல் ஏற்ற அனுமதித்தனர்.

ஒரு சிங்கள போலீஸ் உயர் அதிகாரியும், இரு தமிழ் கான்ஸ்டபிள்களும் இரு தமிழ் வர்த்தகர்களும் அந்தப் பெட்டிகளை விமானத்தில் ஏற்றினர் என்று கூறப்படுகிறது.

இதையடுத்து போலீஸ் அதிகாரியும், காவலர்களும் விசாரிக்கப்பட்டு வருகின்றனர். வியாபாரிகள் இருவரும் தேடப்படுகின்றனர்.

யாழ்ப்பாணத்திற்கு அரசு கூடுதலாக துருப்புகளையும் படைகளையும் அனுப்பிவருகிறது. கடலில் மூழ்கியுள்ள விமானத்தையும், பயணஞ்செய்தவர்களின் உடலையும் மீட்பதற்கு இந்தியா உட்பட உலக நாடுகளின் உதவியை இலங்கை அரசு கோரியுள்ளது. இதுவரை சில அடையாள அட்டைகளும் சிதைந்த உடல்துணுக்குகளும் கடலிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

படிப்பகம்